# <u>மயிலாடுதுறை நகராட்சி</u>

**குறள்:** நல்குரவு என்னும் இடும்பையுள் பல்குரைத்
துன்பங்கள் சென்று படும்.

**பொருள்:** வறுமை ஆகிய பெருந்துன்பம் உருவாகும்போது அதன்
வாயிலாகப் பல்வேறு துன்பங்களும் தாமே வந்த சேரும்!

**கூட்ட எண்: 08/2022**

**நகராட்சி அலுவலகம்**
**மயிலாடுதுறை.**

**நாள்: 26.08.2022**

## <u>சாதாரணகூட்டம்</u>

**அன்புடையீர் !**

பொருள்: கூட்டம் **-** மயிலாடுதுறை நகராட்சி – சாதாரண
கூட்டம் நடைபெறுதல்– சம்பந்தமாக.

****

மயிலாடுதுறை நகர்மன்ற சாதாரண கூட்டம் 2022 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 30.08.2022 ஆம் தேதி செவ்வாய்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் நகர்மன்றத் தலைவர் தலைமையில் நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள நகர்மன்ற கூட்டரங்கில் நடைபெறும் சாதாரணக் கூட்டத்திற்கு தாங்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள் அன்பார்ந்த

(நா. செல்வராஜ்)
நகர்மன்றத் தலைவர்,
மயிலாடுதுறை நகராட்சி.

## 22.07.2022 ஆம் தேதி நடைபெற்ற நகர்மன்ற சாதாரண கூட்டத்தில் ஒத்தி வைக்கப்பட்ட பொருட்கள்

**1)**மயிலாடுதுறை நகராட்சி வறட்சி நிவாரண நிதி 2019 – 2020 ன் கீழ் வார்டு எண்.1,கே.கே.நகர், நீர்தேக்க தொட்டி அமைந்துள்ள வளாகத்தில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைக்கும் பணியினை **ரூ.10,00,000/-** மதிப்பீட்டில் திரு. **E.கண்ணன்** அவர்கள் வழங்கிய குறைந்த ஒப்பந்த புள்ளியினை இந்நகர்மன்ற தீர்மான எண் 604 நாள் 14.08.2019ல் ஏற்கப்பட்டு வேலை உத்தரவு வழங்கும் தருவாயில் மேற்படி பணிக்கான நிதி கிடைக்கப்பெறாததால் மேற்படி ஒப்பந்தாரருக்கு இப்பணிக்கான வேலை உத்தரவு வழங்கப்படாமல் உள்ளது.

மேலும், மேற்படி ஒப்பந்தப்புள்ளி கோரி இரண்டு ஆண்டுகள் கடந்த நிலையில் இதுவரை இப்பணி மேற்கொள்ளாததாலும் இப்பணியினை தற்பொழுது 15-வது நிதிக்குழு திட்டம் 2021-2022-ன் கீழ் தேர்வு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருவதால் இப்பணியினை ரத்து செய்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண். 2339/2019/இ1**

### மன்றத் தீர்மானம் எண். 157 , நாள்: 30.08.2022

### அனுமதிக்கப்பட்டது.

**2)**மயிலாடுதுறை நகராட்சி, வார்டு எண்.10, திருமஞ்சன வீதி அருகில், காவேரி ஆற்றின் குறுக்கே அமைந்துள்ள பாலம் மிகவும் பழுதடைந்துள்ளதை சீரமைக்க கோரி அப்பகுதி பொது மக்களால் கோரிக்கை விடப்பட்டதன் அடிப்படையில் **Capital Grand Fund (CGF)** 2019-20–ன் கீழ் மேற்படி பாலத்தை சீரமைக்கும் பணிக்கு **ரூ.18,00,000/-** மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளி கோரி இந்நகர்மன்ற தீர்மாண எண் 685 நாள் 30.12.2019-ல் இந்நகராட்சி ஒப்பந்தக்காரர் **திரு.K.செந்தில்** அவர்களுக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டது.

மேற்படி பணியினை துவங்க மேற்படி இடத்தினை ஆய்வு செய்த போது பழுதடைந்த பாலமானது பொதுபணித்துறைக்கு சொந்தமான காவேரி ஆற்றில் குறுக்கே இருப்பதால் இப்பணியினை நகராட்சி மூலம் மேற்க்கொள்ள இயலாது எனவும், இப்பணியினை பொதுப்பணி துறையின் மூலமே மேற்கொள்ள முடியும் என்பதால் இப்பணியினை கைவிட நகராட்சி பொறியாளர் 17.01.2020-ல் குறிப்பு வழங்கியுள்ளார். எனவே மேற்படி பணியினை ரத்து செய்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண்.5133/2019/இ1**

### மன்றத் தீர்மானம் எண். 158 , நாள்: 30.08.2022

### அனுமதிக்கப்பட்டது.

## புதிய பொருட்கள்

**1)** மயிலாடுதுறை நகராட்சிக்கு அலுவலக பயன்பாட்டிற்காக நகர்மன்ற தலைவர் அவர்களுக்கு ஒரு ஸ்கார்பியோ வாகனமும் ஆணையர் மற்றும் பொறியாளர் பயன்பாட்டிற்காக இரண்டு பொலிரோ ஈப்பு வாகனமும் கொள்முதல் செய்துகொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு செயல்முறைகள் ந.க.எண்.10290/2022/எம்3, நாள்: 17.05.2022ல் உத்தரவிடப்பட்டுள்ளது. அதன்படி, மேற்பண்ட மூன்று வாகனங்களும் கொள்முதல் செய்திட ஆகும் செலவீனம் ரூ.34,68,551.00/– ஆகும். தற்பொழுது இந்நகர்மன்ற தீர்மானத்தின் நகல் 53, நாள்:24.03.2022ல் மேற்கண்ட வாகனம் கொள்முதல் செய்திட ரூ.32,00,000/– மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே, மேற்கொள்ள கூடுதல் செலவீனத்தொகை ரூ.268551/–ஐ இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து வழங்கியதை மன்றம் பின்னேற்பு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:** மன்றம் பின்னேற்வு வழங்கலாம்.

**நா.க.எண். 4009 / 2021 / இ1**

**<u>மன்றத் தீர்மானம் எண். 159, நாள்: 30.08.2022</u>**

**அலுவலகக்குறிப்பு ஏற்று பின்னேற்பு வழங்கப்பட்டது.**

**2)** இந்நகராட்சியில் நகர்மன்றத்தலைவர், நகர்மன்றத்துணைத்தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்களுக்கு மாதந்தோறும் கூட்ட அமர்வுபடி ரூ.600/– வீதம் வழங்கப்பட்டு வருகின்றது. இந்நிலையில் மார்ச் முதல் ஜுலை வரையில் கூட்ட அமர்வுபடி கீழ்கண்டவாறு

| வ. எண் | மாதம் / வருடம் | அமர்வுபடி தொகை | தொகை வழங்கப்பட்ட விபரம் |
|---|---|---|---|
| 1 | மார்ச் – 2022 | 600/–<br>35 உறுப்பினர்கள்<br>(நகர்மன்றத்தலைவர், நகர்மன்றத்துணைத்தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள்) | ரூ.21000/– |
| 2 | ஏப்ரல் – 2022 | " | ரூ.21000/ |
| 3 | மே – 2022 | " | ரூ.21000/ |
| 4 | ஜுன் – 2022 | " | ரூ.21000/ |
| 5 | ஜுலை –2022 | " | ரூ.21000/ |

மேற்கண்ட விபரபடி கூட்ட அமர்வுபடி வழங்கப்பட்டுள்ள மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>** பதிவு செய்து ஒப்புதல் வழங்கலாம்.

**நா.க.எண்.3055/2022/எச்1**

**<u>மன்றத் தீர்மானம் எண். 160, நாள்: 30.08.2022</u>**

**பதிவு செய்து ஒப்புதல் வழங்கப்பட்டது.**

**3)** மயிலாடுதுறை நகராட்சியில் அலுவலக பயன்பாட்டிற்காக நகர்மன்ற தலைவர், அவர்களுக்கு ஒரு ஸ்கார்பியோ வாகனமும், ஆணையர் மற்றும் பொறியாளர் பயன்பாட்டிற்கு இரண்டு பொலிரோ ஈர்ப்பு வாகனமும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.என்:10290/2022/எம்3, நாள்: 17.05.2022ன் படி புதியதாக கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இவ்வாகனங்களுக்கு ஓர் ஆண்டிற்கு செலுத்தப்பட வேண்டிய வாகன காப்பீடு தொகை **ரூ.94,834/- (ரூபாய் தொன்னூற்று நான்கு ஆயிரத்தி எண்ணூற்று முப்பத்தி நான்கு மட்டும்)** ஆகும். இம்மூன்று வாகனங்களுக்கும் வாகன காப்பீடு செய்யப்படவேண்டியதன் அவசியம் கருதி இதற்கு ஆகும் செலவினத் தொகை **ரூ.94,834/-** இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : (1) மன்றம் அனுமதிக்கலாம்.

(2) மேற்படி வாகனங்களின் பயன்பாட்டு அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று கார்த்திக் ஏஜென்சி, மயிலாடுதுறை நிறுவனம் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டதை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண். 4009/2021/இ1**

**<u>மன்றத் தீர்மானம் எண். 161, நாள்: 30.08.2022</u>**

**அனுமதிக்கப்பட்டது.**

**4)**மயிலாடுதுறை நகராட்சியில் அலுவலக பயன்பாட்டிற்காக நகர்மன்ற தலைவர், அவர்களுக்கு ஒரு ஸ்கார்பியோ வாகனமும், ஆணையர் மற்றும் பொறியாளர் பயன்பாட்டிற்கு இரண்டு பொலிரோ ஈர்ப்பு வாகனமும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.என்:10290/2022/எம்3, நாள்: 17.05.2022ன் படி புதியதாக கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இவ்வாகனங்களுக்கு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் செலுத்தப்பட வேண்டிய பதிவுக்கட்டணம், வாகன ஆயுள் வரி மற்றும் சாலைவரி ஆகியவற்றின் கூடுதல் தொகை **ரூ.6,08,504/- (ரூபாய் ஆறு லட்சத்து எட்டாயிரத்தி ஐநூற்று நான்கு மட்டும்)** ஆகும். இம்மூன்று வாகனங்களின் பயன்பாட்டு அவசியம் கருதி மேற்கண்ட பதிவுக்கட்டணம், வாகன ஆயுள் வரி மற்றும் சாலைவரி கட்டணத் தொகை **ரூ.6,08,504/-** இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவீனம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : (1) மன்றம் அனுமதிக்கலாம்.

(2) மேற்படி வாகனங்களின் பயன்பாட்டு அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று கார்த்திக் ஏஜென்சி, மயிலாடுதுறை நிறுவனம் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டதை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண். 4009/2021/இ1**

**மன்றத் தீர்மானம் எண். 162, நாள்: 30.08.2022**

**அனுமதிக்கப்பட்டது.**

**5)** மயிலாடுதுறை நகராட்சி குடிநீர் திட்டத்தின் கீழ் குடிநீர் விநியோகம் இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணியில் மணல்மேடு கொள்ளிடம் ஆற்றில் அமைக்கப்பட்டுள்ள தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து குடிநீர் நீரேற்றம் செய்து இந்நகராட்சி பகுதியில் உள்ள வரதாச்சாரியார் பூங்கா மேல்நிலை நீர் தேக்க தொட்டி, கே.கே.ஆர் நகர் மேல்நிலை நீர் தேக்க தொட்டி, மாமரத்து மேடை மேல்நிலை நீர் தேக்க தொட்டி மற்றும் பாரதி நகர் மேல்நிலை நீர் தேக்க தொட்டி ஆகிய இடங்களில் தினசரி குடிநீர் வால்வுகளை திரந்து/மூடி இயக்கும் பணிக்கு மாவட்ட ஆட்சியர் விலைகிதத்தில் பணியாளர்கள் சப்ளை செய்யும் பணி திரு.A. சட்டையப்பன் ஒப்பந்தகாரரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தற்பொழுது குடிநீர், மின்சாரம், பாதாள சாக்கடை போன்ற பராமரிப்பு பணிகளுக்கு Out Sourcing முறையில் பணியாளர்களை நியமித்துக்கொள்ள திட்ட கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதால், அரசின் உரிய ஒப்புதல் கிடைக்கம் வரை மேற்கண்ட மாவட்ட ஆட்சியர் விலைகிதத்தில் பணியாளர்கள் சப்ளை செய்யும் பணி மேற்கொண்டு வரும் ஒப்பந்தகாரர் மூலம் அதே விலை விகிதத்தில் மேலும் 6 மாத காலத்திற்கு (ஏப்ரல்–2022 முதல் செப்டம்பர்–2022 வரை) கால நீட்டிப்பு செய்திடவும், இதற்கு ஆகும் உத்தேச செலவீனம் ரூ.7.33 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:1)** மன்றம் அனுமதிக்கலாம்.

2) ஏப்ரல் –2022 முதல் ஆகஸ்ட்–2022 வரை இப்பணியினை மேற்கொண்டதற்கு நகர்மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

3) செப்டம்பர்–2022 மாதம் தொடர்ந்து இப்பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

4) இதற்கு ஆகும் செலவினத்தை குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் : 02155/ 2022 / இ1**

## <u>மன்றத் தீர்மானம் எண். 163, நாள்: 30.08.2022</u>

## அலுவலக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**6)**மயிலாடுதுறை நகராட்சியின் தணிக்கை தடை புத்தகங்கள் 2004–2005 முதல் 2018–2019 வரையிலான புத்தகங்கள் சேதமடைந்துள்ளதாலும், இத்தணிக்கை தடை புத்தகங்களை பைண்டிங் செய்யவும், 2020–2021ம் ஆண்டு தணிக்கை முடிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளதை தொடர்ந்து ஐந்து நகல்கள் ஜெராக்ஸ் எடுத்து அதனை பைண்டிங் செய்வதற்கு உத்தேச செலவினம் ரூ.15000/–ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.8703/2017/அ3**

## <u>மன்றத் தீர்மானம் எண். 164, நாள்: 30.08.2022</u>

## அனுமதிக்கப்பட்டது.

7) இந்நகராட்சியில் துாய்மைப் பணியாளராகப் பணிபுரிந்து வந்த திருமதி. A. தனம்மாள் 30.06.2020 அன்று வயது முதிர்வு காரணமாக பெற்றுள்ளதால் சிறப்பு அன்னாருக்கு வழங்க வேண்டிய சிறப்பு சேமநலநிதி நகராட்சி பங்குத்தொகை ரூ.10,000/–ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நா.க.எண். 02536 / 2022 /பி4**

**<u>மன்றத் தீர்மானம் எண். 165, நாள்: 30.08.2022</u>**

**அனுமதிக்கப்பட்டது.**

8) மயிலாடுதுறை நகராட்சியில் ஒருங்கிணைந்த நவீன புதிய பேரூந்து நிலையம் அமைக்கும் பணிக்கு அரசாணை (நிலை) எண்.20, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை, நாள்:20.01.2022ல் நிர்வாக அனுமதி வழங்கிட உத்திரவிடப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் அனுப்பப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–** 1) மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2) மேற்படிப் பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் பதிவு செய்யலாம்.

**ந.க.எண் 4812 / 2016 /இ1**

**<u>மன்றத் தீர்மானம் எண். 166, நாள்: 30.08.2022</u>**

**அனுமதிக்கப்பட்டது.**

9) மயிலாடுதுறை நகராட்சி வாகன ஓட்டுநர், திரு.வி.முரளி, குப்பை அள்ளும் வாகனம் LCV TATA AC வாகனம் எண்.TN82H–0334 பயன்படுத்தப்படுவதற்கு மின்கலப்பெட்டி (பேட்டரி) பழுதாகிவிட்டதால் புதியதாக மின்கலப்பெட்டி (பேட்டரி) பெற்று வழங்கக் கோரியுள்ளதின்பேரில் துப்புரவு ஆய்வர் தனது 19.07.2022ந் தேதிய குறிப்பில் புதிய மின்கலப்பெட்டி பெற்று வழங்கலாம் என தெரிவித்துள்ளார். எனவே, மின்கலப்பெட்டியின் உத்தேச விலை ரூ.5000/– (ஐந்தாயிரம் மட்டும்)–க்கு விலைப்புள்ளி கொடுத்துள்ளார். எனவே, மன்றத்தின் அனுமதி பெற்று மின்கலப்பெட்டி வாங்கிக் கொள்ள மன்றத்தில் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–** 1) மன்றம் அனுமதிக்கலாம்.

**நா.க.எண் 3131 / 2022 / எச்3**

**<u>மன்றத் தீர்மானம் எண். 167, நாள்: 30.08.2022</u>**

**அனுமதிக்கப்பட்டது.**

10)' இந்நகராட்சியில் பலவிதமான பணிகள் மற்றும் திட்டப்பணிகள் செய்யப்பட்டு பணிகளை மேற்கொள்ளும் ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப்படும் பில்பட்டியல் தொகையில் வருமானவரி, (Income Tax) மற்றும் பொருள் சரக்கு சேவைவரி (GST) செய்யப்பட்டதைப் பட்டியகணக்கர் மூலமாக இணையதளத்தில், செலான்கள் பெறப்பட்டு, தொடர்புடைய வங்கிகள் மூலமாக செலுத்தப்பட்டு, பின்னர் ஒவ்வொரு ஒப்பந்ததாரர்களுக்கும் வருமானவரி, பொருள் சரக்கு சேவைவரியினை TDS Filing செய்யப்பட்டு வருகிறது. ஏற்கனவே, மேற்கண்ட பணியினை திரு. ஆர். சட்டநாதன், பட்டயகணக்கர் மூலமாக மேற்கொள்ளப்பட்டு வருவதால், 2021–2022 மற்றும் 2022–2023 ஆகிய இரண்டு ஆண்டுகளுக்கு TDS filing கட்டணம பட்ய கணக்கருக்கு வழங்க வேண்டி உத்தேச செலவினம் ரூ.50,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–** 1) மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>மன்றத் தீர்மானம் எண். 168, நாள்: 30.08.2022</u>**

**அனுமதிக்கப்பட்டது.**

**11)** தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 270–வது பிரிவின்கீழ் இந்நகராட்சி பகுதிக்குட்பட்ட தெருவோர வியாபாரிகள் (தரைக்கடைகள்) மற்றும் வண்டிகளில் வைத்து பாதையோரத்தில் வியாபாரம் செய்பவர்களுக்கும், பண்டிகை காலங்களில் தரைகளில் பரப்பிவைத்து வியாபாரம் செய்யப்படும் கடைகளுக்கும், தினசரி கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு ஏற்கனவே 25.10.2019 முதல் 24.10.2022 வரையிலான மூன்றாண்டு காலத்திற்கு ஒப்பந்தப்புள்ளி மூலம் திரு,.காமேஷ் என்பவருக்கு உரிமம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்படி குத்தகை உரிமக்காலம் முடிவடைவதால் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணைப்படி கட்டண விகிதத்தில் வசூல் செய்யவும், 2021–2024ம் ஆண்டு பொது ஏலம் நிபந்தனைக்குட்பட்டு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூன்றாண்டு காலத்திற்கு (ஒப்டைக்கும் நாள்முதல் உரிமம் அனுபவித்துக்கொள்ள) பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை மேற்கொள்ளவும், தினசரி செய்திதாளில் விளம்பரம் செய்யவும் அதற்கான தொகையினை வழங்கவும், மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | இனங்களின் விபரம் | செலுத்த வேண்டிய ஏல பொறுப்புதொகை ரூ. | சொத்து மதிப்பிற்கான கூடுதல் பொறுப்பு தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | 1920ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 270வது பிரிவின்கீழ் வசூல் செய்யும் உரிமம் | ரூ.10,00,000/– | ரூ.10, 00,000/– |

<u>அலுவலகக் குறிப்பு</u>: –

1) மன்றம் அனுமதிக்காலாம்.
2) 2021–2024 ஆம் ஆண்டு பொது ஏல நிபந்தனைகளின்படி கூடுதல் பொறுப்பு தொகை நிர்ணயம் செய்யப்பட்டதின்படி இவ்வினத்திற்கும் கூடுதல் பொறுப்புதொகை ரூ10 .00 இலட்சம் என நிர்ணயம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

## அட்டவணை கட்டண விகிதம்

| வ. எண். | விபரம் | ரூ. |
|---|---|---|
| 1) | திறப்புக்கடை 13 சதுர அடிக்கு | 30 |
| 2) | வண்டியில் வைத்து பாதையோரத்தில் வியாபாரம் செய்வதற்கு (நாள் ஒன்றுக்கு). | 30 |
| 3) | மினி லாரி வண்டியில் வைத்து பாதையோரத்தில் வியாபாரம் செய்வதற்கு | 50 |
| 4) | மூன்று சக்கரவண்டியில் விற்பனை செய்யும் பொருட்களுக்கு (நாள் ஒன்றுக்கு) | 50 |
| 5) | 3’X2’ சதுரடி பரப்பளவு இடத்தில் பொருட்களை பரப்பிவைத்து வியாபாரம் செய்பவர்களுக்கு | 30 |
| 6) | திரு.வி.க மார்க்கெட் நகராட்சி மீன்மார்க்கெட்டினைத் தவிர மற்ற நகராட்சி பகுதிக்குட்பட்ட இடங்களில் வெளியில் கொண்டு வரப்படும் சரக்குகளுக்கு கட்டணம். | 50 |
| 7) | தீபாவளி போன்ற விஷேச நாட்களில் மேற்படி அனுமதிக் கட்டணம் இருமடங்கு வசூலிக்கலாம். | – |

**ந.க.எண்.3529/2022/அ2**

**<u>மன்றத் தீர்மானம் எண். 169, நாள்: 30.08.2022</u>**

**அலுவலக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

12) மயிலாடுதுறை நகராட்சி பகுதிகளில் 2022ம் ஆண்டு ஐப்பசி மாதம் நடைபெறும் துலா உற்சவ காலத்தில் பார்க் அவென்யூ சாலையின் தென்புறம், பழங்காவேரி, வடபுறம் சுற்றுச்சுவர் எழுப்பப்பட்டுள்ள இந்நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் தற்காலிக விழாக்கடைகள் 11.11.2022 முதல் 30.12.2022 வரையிலான காலத்திற்கு அமைத்துக்கொள்ளவும் அதற்கான கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும் அதற்கு ஆகும் விளம்பர செலவினத்திற்குரிய தொகையினை பொது நிதியில் இருந்து வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–** மன்றம் அனுமதிக்கலாம்,

ந.க.எண்.03530/2022/அ2

**<u>மன்றத் தீர்மானம் எண். 170, நாள்: 30.08.2022</u>**

**அனுமதிக்கப்பட்டது.**

13) இந்நகராட்சிக்கு சொந்தமான பழனிச்சாமி அங்காடி (புதிய கட்டிடம்) மேல்தளத்தில் உள்ள கடை எண்.2, 3, 7, 8 மேட்டுத்தெரு, கடை எண்.1, பேரூந்து நிலைய உட்புற UBSP கடை ஆகிய ஆறு கடைகள் நிலுவைத்தொகை செலுத்தப்படாததால் கடந்த டிசம்பர் மாதம் பூட்டி சீல் வைக்கப்பட்டது. மேலும், பலமுறை நிலுவைத்தொகையினை செலுத்த அறிவிப்பு அனுப்பப்பட்டும் இதுவரை யாரும் செலுத்தாததால் சம்பந்தப்பட்ட கடைகளை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மேற்கொள்ளலாம். குத்தகைதாரர் மீது வழக்கு தொடரவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | கடை விபரம் | குத்தகைதாரர் பெயர் | நிலுவைத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | பழனிச்சாமி அங்காடி முதல் தளம் கடை எண்.2 | அ. ராமதாஸ் | 52654/– |
| 2 | பழனிச்சாமி அங்காடி முதல் தளம் கடை எண்.3 | அ. ராமதாஸ் | 50373/– |
| 3 | பழனிச்சாமி அங்காடி முதல் தளம் கடை எண்.7 | என். செல்வகணேஷ் | 50278/– |
| 4 | பழனிச்சாமி அங்காடி முதல் தளம் கடை எண்.8 | அறிவுக்கண்ணு | 22707/– |
| 5 | மேட்டுத்தெரு கடை எண்.1 | V. முனுசாமி | 148648/– |
| 6 | பேரூந்து நிலைய உட்புற UBSP கடை | M. அன்பழகன் | 978463/– |

**அலுவலகக்குறிப்பு:–** மன்றம் அனுமதிக்கலாம்,

**ந.க.எண்.1968/2020/அ2**

**<u>மன்றத் தீர்மானம் எண். 171, நாள்: 30.08.2022</u>**

**அனுமதிக்கப்பட்டது.**

**14) 23-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு. கு,. சதீஷ்குமார் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்:-**

1. தனது வார்டுக்குட்பட்ட சின்னக்கடைத்தெருவில் உள்ள பெரியகோவில் வடக்கு வாசல் செல்லும் வழியில் கல்வெட்டு அமைத்துத்தர வேண்டுதல்

2. தனது வார்டுக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சோடியம் ஆவி விளக்குகள் சரியாக எரியவில்லை என்பதால் சோடியம் ஆவிவிளக்குகளுக்கு மாற்றாக புதிய எல்.இ.டி. விளக்குகளை மாற்றி தர வேண்டி

3. தனது வார்டுக்குட்பட்ட மாயூரநாதர் பெரியகோவில் நான்கு வீதிகளிலும் கேபிள் ஒயர் ஆங்காங்கே பழுதுகள் ஏற்பட்டுள்ளதை சரி செய்திட வேண்டி

4. தனது வார்டுக்குட்பட்ட மாயூரநாதர் திருக்கோயில் உள்ள வடிகாலை சரிசெய்திட வேண்டி

5. தனது வார்டுக்குட்பட்ட மாயூரநாதர் திருக்கோவில் உள்ள மினி பவர் டேங்க் புதிதாக மாற்றம் செய்திட வேண்டி

6. மாயூரநாதர் தெற்குவீதியில் பூக்கொல்லை பகுதிகளில் பாதாள சாக்கடைத்திட்டம் செயல்படுத்திட வேண்டி

7. மாயூரநாதர் நகராட்சி பகுதியில் உள்ள கோயில் இடங்களுக்கு புதியதாக வீட்டு வரி விதிப்பதற்கு அனுமதி வேண்டி

மேற்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

பதிவு செய்யப்பட்டது. வரிசை எண் 1 முதல் 7 வரையில் உள்ள தீர்மானங்களுக்கு நகராட்சியில் தற்போது போதிய நிதி ஆதாரங்கள் இல்லாததால் மத்திய, மாநில அரசிடமிருந்து நிதிகள், கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு நிதி, நமக்கு நாமே மேம்பாட்டு நிதி, கிடைக்கப்பெறும்போது பணிகள் செய்திட தீர்மானிக்கப்பட்டது. வரிசை –8 ல் உள்ள தீர்மானத்திற்கு அரசின் அனுமதி பெற்ற பிறகு வரி விதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

**நா.க.எண்.3056/2022/எச்1**

## <u>மன்றத் தீர்மானம் எண். 172, நாள்: 30.08.2022</u>

## அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**15) 26-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு. அ. ராமச்சந்திரன் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்:-**

1. தனது வார்டுக்குட்பட்ட புனுகீஸ்வரர் குளத்தை சீர் அமைப்பதுடன் தண்ணீர் வரும் பாதை சீர் அமைத்துதர வேண்டுதல்

2. தனது வார்டுக்குட்பட்ட புனுகீஸ்வரர் தெற்கு வீதி தார்சாலை மிகவும் பாதிப்பு அடைந்துள்ளதை தொடர்ந்து புதிதாக தார்சாலை அமைத்திட வேண்டி

3. தனது வார்டுக்குட்பட்ட புனுகீஸ்வரர் கீழ வீதியில் உள்ள ரூபி காம்ப்ளக்ஸ்ல் சாலைக்கு புதிதாக தார்சாலை அமைத்திட வேண்டி

4. தனது வார்டுக்குட்பட்ட அனைத்து தெருக்களுக்கும் மழைநீர் வடிகால் சரிசெய்திட வேண்டி

5. தனது வார்டுக்குட்பட்ட புனுகீஸ்வரர் வாய்க்காங்கரைத்தெருவில் உள்ள கல்வெட்டு மிகவும் அபாயகரமாக உள்ளதால் அதனை சீர் செய்திட வேண்டுதல்

மேற்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றிட மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

பதிவு செய்யப்பட்டது. நகராட்சியில் தற்போது போதிய நிதி ஆதாரங்கள் இல்லாததால் மத்திய, மாநில அரசிடமிருந்து நிதிகள், கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு நிதி, நமக்கு நாமே மேம்பாட்டு நிதி, கிடைக்கப்பெறும்போது பணிகள் செய்திட தீர்மானிக்கப்பட்டது.

**நா.க.எண்.3056/2022/எச்1**

## மன்றத் தீர்மானம் எண். 173, நாள்: 30.08.2022

## அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**16) 36-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி. ஆனந்தி ஆனந்தகுமார் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்:-**

1. தனது வார்டுக்குட்பட்ட பெசன்ட் நகர் நேரு, அல்லி தெருவில் இணைப்பு பாலம் அமைத்திட வேண்டுதல்

2. தனது வார்டுக்குட்பட்ட புளியந்தெரு சந்தில் புதியதாக தார்சாலை அமைத்திட வேண்டுதல்

3. தனது வார்டுக்குட்பட்ட பெசன்ட் நகர் சூரியகாந்தி தெருவுக்கு தார்சாலை அமைத்திட வேண்டுதல்

4. தனது வார்டுக்குட்பட்ட பெசன்ட் நகர் மகிழம்பூ தெருவுக்கு புதியதாக தார்சாலை அமைத்திட வேண்டி

5. தனது வார்டுக்குட்பட்ட பெசன்ட் நகர் அல்லி தெருவில் தார்சாலை அமைத்திட வேண்டுதல்

6. தனது வார்டுக்குட்பட்ட பெசன்ட் நகர் நேரு தெருவுக்கு புதியதாக தார்சாலை அமைத்திட வேண்டி.

7. தனது வார்டுக்குட்பட்ட பெசன்ட் நகர் தாமரை தெருவுக்கு புதிய தார்சாலை அமைத்திட வேண்டி

மேற்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

பதிவு செய்யப்பட்டது. நகராட்சியில் தற்போது போதிய நிதி ஆதாரங்கள் இல்லாததால் மத்திய, மாநில அரசிடமிருந்து நிதிகள், கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு நிதி, நமக்கு நாமே மேம்பாட்டு நிதி, கிடைக்கப்பெறும்போது பணிகள் செய்திட தீர்மானிக்கப்பட்டது.

**நா.க.எண்.3056/2022/எச்1**

**<u>மன்றத் தீர்மானம் எண். 174, நாள்: 30.08.2022</u>**

**அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

(ஒம்/– நா.செல்வராஜ்)
நகரமன்றத் தலைவர்,
மயிலாடுதுறை நகராட்சி

// உண்மை நகல் //

ஆணையாளர்,
மயிலாடுதுறை நகராட்சி.